முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1400

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.07.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. அறம்பல கலியுகத்தில் செய்து
அற்புதத்தை நடத்துகின்ற குருராஜனே
வரம்பெற்ற என் சக்தியே வாழும் ஞானியே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
உயர்வுபட சோபகிருது நள்ளித் தங்களில்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 14 ம் நாள், 30.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
ஞானசக்தி அரங்கனுக்கு கூட
ஞானபண்டிதனும் ஞான அறிவு ஆசிதனை உரைத்திடுவேன்
3. உரைத்திட அரங்கன் பலம்
உலகமெல்லாம் பரவி இனிதே
உலகமாற்றமாக நிகழ சடுதி வாய்ப்பு உண்டு
உத்தமனே உன் தொண்டர்படை உலகமெல்லாம் நிரம்பி வருதல் காண
4. காணவே மாற்றம் நிகழக்கூடும்
கருணைகொண்ட அரங்கன் மார்க்கம் தான்
ஞானத்தின் தலைமையாக இந்த உலகில் இருக்க
நம்பிக்கைக் கொண்டு உலகோர் ஞானவழி வருதலுற
5. எங்குமே அற்புதம் நடந்தேறும்
நடந்தேற ஞானசபையாக
ஞாலமதில் அரங்கன் குடிலை உருவாக்கி
அன்னதனால் ஓங்காரக்குடில் நோக்கி தயவு வேண்டி வருபவர்க்கு
6. வருபவர்க்கு குடிலில் செயல்பாடுகள்
வையகத்தில் எந்த குறையுமில்லா
வரவேற்று உயர்வாக நடத்த வேண்டும்
வழிமொழிந்து அவர்கள் அஞ்ஞானவழி இருந்தாலும்
7. இருந்தபோதும் அவர்கட்கு தயவு காட்டி
இனி மாற்றம் கண்டு சிறப்பாய் வாழ
கருணையோடு வழிகாட்டவேண்டும்
கருணைகொண்டு அரங்கன் சீடர்கள்

8. கண்ணியமுற குடிலில் நடந்துகொண்டு
வருவோர் மனம் துன்புறா
வையகத்தில் நாடி வருபவரெல்லாம்
வல்லமைபட அரங்கனுக்கு பிறவித்தொடர்பானவர்கள்
9. அன்னதனால் அவர்கள் மனம் புண்படா
அஞ்ஞானவானாய் இருந்தபோதும்
அவர்கள் தெளிவுகொள்ளும் வண்ணம்
எளிமைபட இறக்கமோடு உபதேசம்
10. ஏற்று அரங்கன் நாமஜெபம் கூறி
மாற்றத்துக்கு வழி காட்ட வேண்டும்
மக்களை ஏற்று வழிநடத்தினால்தான்
வையகத்தில் அரங்கன் அவதார நோக்கமான
11. ஆனதொரு அற்புதம் சடுதி நிகழ
அனைவரும் இணைந்து பங்காற்றும் ஆற்றல் சடுதி நிகழக்கூடும்
கூடவே எதிர்மறை குறைகூறி
சாடுகின்ற எண்ணங்கள் குறையாக இனி எப்போதும்
ஓங்காரக்குடிலில் எவர்வாய் மொழியிலும் வரக்கூடாது
12. கூடாது எதிர்மறை எண்ணங்கள்
குடில்நோக்கி வருபவர் மனதிலே
இடர்படும் வண்ணம் உபதேசங்களும்
இனிதே சைவநெறி காட்டுகின்றேன் என்று
13. இடரான வாசகங்கள் எதிர்மறை எண்ணங்கள்
இழிவுபட வருபவரை சாடுகின்ற நிலைகள் அவசியம்
அரங்கன் தொண்டர்கள் இடையே இல்லாமல்
ஆற்றல்பட ஞானசபை ஓங்காரக்குடிலில்
14. அனைவரும் இயங்கவேண்டும்
இந்த அற்புதம் நிகழவே
அவதார நோக்கம் அரங்கனுக்கு
இலகுவாய் பூர்த்தியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–